விஜயபாரதம்
05.09.2020 மலர் - 1, இதழ் - 153 VIJAYABHARATHAM DAILY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

## மறைக்கப்படும் உண்மைகள்

எதிர்கட்சிகளுக்கு தற்போதைய பரபரப்பான செய்தி "இந்திய ஜி.டி.பி சரிவு". அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும் ஜி.டி.பி'யில் பாரதத்தின் வளர்ச்சி + 1.9. ஆனால் அமெரிக்கா 5.9, ரஷ்யா 5.5, ஆஸ்திரேலியா 6.7, ஜெர்மனி 7, பிரான்ஸ் 7.2, இத்தாலி 9.1 என எதிர்மறையில் செல்கிறது. சீனா + 1.2. இது நம் பாரதத்தைவிட குறைவுதான். கொரோனாவால் உலக நாடுகளே ஸ்தம்பித்துள்ள போதும்கூட அரசின் முயற்சிகளால் நம் வளர்ச்சி சொல்லும் படியாகவே உள்ளது.

அரசு இயங்க வரி வருவாய்தான் அடிப்படை. ஆனால் தற்போது வருவாய் குறைந்து, செலவு பலமடங்கு உயர்ந்துள்ளது. காவல், சுகாதாரம், துப்புரவு போன்ற பணியாளர்கள் தவிர மற்ற மத்திய, மாநில அரசு ஊழியர்கள் கடந்த ஆறு மாதங்களாக வேலையே செய்யாமல் முழு சம்பளம் வாங்கினர். அதில் சிலரை கொரோனா நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்த முனைந்த போது எதிர்த்து நீதிமன்ற படியேறினர். ஜி.டி.பி சரிவை பேசும் அரசியல்வாதிகள் இந்த இரட்டை நிலையை கண்டிக்கவில்லையே?

இதைப் போன்ற இக்கட்டான நிலையில் பொருளா தாரப் பின்னடைவு ஏற்படுவது இயற்கையே. 42 லட்சம் மக்கள் தொகை கொண்ட பணக்கார நாடான குவைத் அக்டோபருக்கு பிறகு அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க பணம் இல்லை என்கிறது. ஆனால் 130 கோடி மக்களுக்கு நவம்பர் வரை இலவச ரேஷன், அரசு ஊழியர்களுக்கு முழுசம்பளம், தொழில் விவசாயத்திற்கு கடனுதவி என அள்ளிக்கொடுக்கிறது பாரதம்.

திட்டமிட்டு மறைத்து மோடி எதிர்ப்பு, மத்திய அரசு எதிர்ப்பு என அப்பாவி மக்களின் அறியாமையை பயன்படுத்தி ஆதாயம் தேடுகின்றனர் சில பொறுப்பற்ற எதிர்க்கட்சிகளும், ஊடகங்களும்.

# பரதன் பதில்



*சீனா தற்போது எல்லையில் மூர்க்க தனமாக நடந்து வருகிறது என்று தலைமை தளபதி கூறியுள்ளாரே அதுபற்றி?*

**மெயிலில் குகன், திருச்சி**

அதை எப்படி சமாளிக்க வேண்டும் என்பது இந்திய ராணுவத்திற்குத் தெரியும் என அவரே கூறியுள்ளாரே? தற்போது ராணுவத்தின் பலம் பன்மடங்கு உயர்ந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

## உள்துறை தலையீடு

அண்மையில் ராமநாதபுரத்தில் பயங்கரவாதிகள் அருண் என்பவரை கொலை செய்தனர். கண்டித்து பல ஹிந்து அமைப்புகள் போராட்டத்தில் இறங்கின. லெப்ட் ஷேக் உட்பட நால்வர் சரணடைந்தனர். ஆனால் காவல்துறை இது முன்விரோத கொலை, என வழக்கை திசை திருப்ப பார்த்தது. தற்போது இந்த விவகாரத்தில் உள்துறை அமைச்சகம் தலை யிட்டுள்ளது. வழக்கை சரியாக விசாரிக்காத எஸ்.ஐ வருண் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப் பட்டுள்ளார்.

வழக்கு விரைவில் என்.ஐ.ஏ'வுக்கு மாற்ற வேண்டும் என்பது பலரது வேண்டுதல்.

## கோயில் காத்த இந்து முன்னணி



சென்னை மந்தை வெளியில் உள்ள ஒரு அம்மன் கோயிலின் வாயில் அருகிலேயே முஸ்லிம் ஒருவர் பிரியாணி சமைத்து விற்பனை செய்கிறார். இதனை பலமுறை பூஜாரி எடுத்து கூறியுள்ளார். ஆனால் அவர்கள் தொடர்ந்து இதே தவறை செய்து வந்ததால் பூஜாரி கோயிலை பூட்டிவிட்டார். முஸ்லிம்களின் அராஜக போக்கை அங்குள்ள மக்கள் கண்டித்துள்ளனர்.

தற்போது ஹிந்துமுன்னணி தலையீட்டால் பிரியாணி கடைக்கு சீல் வைக்கப்பட்டது. கோயிலும் திறக்கப்பட்டது.

## திருந்தாத திமுக

கடந்த வாரம் ஓணம் பண்டிகைக்கு திமுக தலைவர் ஸ்டாலின் வாழ்த்து கூறியிருந்தார். ஆனால் அதன் செய்தி தொடர்பாளர் பிரசன்னா ஓணம் பண்டிகையின் மகாபலி சக்கரவர்த்தி வாமன ரூப மகாவிஷ்ணுவை பூணூலை பிடித்து தலைகீழாக தொங்கவிட்டு இருப்பது போன்று கேலிச்சித்திரத்தை வெளியிட்டு தனது பகுத்தறிவை காட்டியுள்ளார். இது ''பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலை ஆட்டுகின்றார் நல்லவர் போல் நடிப்பார் ஞானத்தங்கமே இவர் ஏதும் அறியாதவர் ஞானத்தங்கமே'' என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. திமுக ஒருபோதும் திருந்தாது என்பதை அவ்வப்போது வெளிப்படுத்துகிறது அப்பாவி ஹிந்துக்கள் இதை புரிந்து கொண்டு திமுகவை ஒதுக்கி வைப்பது தமிழகத்திற்கும் இந்து ஆன்மீக சக்திகளுக்கும் நல்லது.

## திரும்ப பெறவும் தயங்காது . . .

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான பிரதம மந்திரி நிதி உதவி திட்டத்தில் மோசடி நடைபெற்றது. அது கண்டு பிடிக்கப்பட்டு விவசாயி அல்லாதவரிடமிருந்து ரூபாய் 4.50 லட்சம் 4 கோடியே 50 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட கலெக்டர் கிரன் குராலா தலைமையிலான குழு இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்தத் தொகை போலி பயனாளிகளிடம் இருந்து திரும்பப் பெறப்பட்டு அரசின் கஜானாவில் சேர்க்கப் பட்டுள்ளது. தகுதியற்ற நபர்கள் பெறுகின்ற பொழுது அதை திரும்பவும் அதிரடியாக பெறும் என்பதை இந்த முயற்சி நிரூபித்துள்ளது.

## ஒப்பீடு

**காங்கிரஸ் ஆட்சியில்:** 1962 அக்ஸாய்சின், 1963 காராகோரம் பாஸ், 2008 தியா பங்கங், சாபாஜி, 2009 தூம்சேலி, 2012 டி எம் ஜோக், 2013 ராக்கினுல்லா ஆகிய பகுதிகள் சீனாவிடம் பறிகொடுக்கப்பட்டன.

**பாஜக ஆட்சியில்:** 2017 டோக்லாம் ஆக்கிரமிப்பு முறியடிப்பு, 2020 எல். புலாக்கி, பங்கங்கனா தீசா, கல்வான் ஆக்கிரமிப்பு முறியடிப்பு. தற்போது நாம் இழந்த ரேக்ஸின் லா, ஹெல்மெட் டாப், பிளாக் டாப், வடக்கு பிங்கர் உள்ளிட்ட 31 சிகரங்கள் மீட்கப்பட்டுள்ளன.

# தியாகத் திருவுரு



ராஜபுத்ர வம்சத்தைச் சேர்ந்த மகாராணா பிரதாபசிம்மன் ராஜஸ்தானில் மேவார் (உதயபூர்) மன்னராக இருந்தார்.

தீவிரமான நாட்டுப்பற்றுடைய சிறந்த போர் வீரர். அப்போது டெல்லியில் முஸ்லிம் மத வெறியனான அக்பரின் ஆட்சி இருந்தது. அக்பர், ஹிந்து மன்னர்களை ஏமாற்றி, அவர்களின் ராஜவம்ச பெண்களை தனது அந்தப்புரத்திற்கு கொண்டு சென்றான்.

அக்பருக்கு அடிபணியாதது மட்டுமல்லாமல், முஸ்லிம் ஆட்சியை எதிர்த்து தீவிரமாக மகாராணா போராடினார். இதனால் ஆத்திரமுற்ற அக்பர், ஒரு பெரும் படையுடன் மேவார் மீது படையெடுத்தான். ஹல்திகாட்டிலே போர் நடைபெற்றது. அக்பரின் பெரும் படை முன்பு மகாராணாவின் சிறிய படை தாக்குப்பிடிக்க முடியவில்லை. மகாராணாவின் வீரர்கள் 22,000 பேர் பலியானார்கள். ராணா பிரதாப் போர்க்களத்தை விட்டு வெளியேறினார்.

நேற்றுவரை அரண்மனையில் சுகபோகங்களுடன் வாழ்க்கை நடத்தி வந்த மகாராணா, காட்டில் தனது மனைவி, குழந்தைகளுடன் தலைமறைவாக வாழ்ந்தார். மனைவியும் குழந்தைகளும் பசியால் வாடினார்கள். ஒரு குழந்தை பசியின் காரணமாகவே மடிந்து போனது.

அக்பரிடம் பணிந்து போயிருந்தால், அரண்மனை வாழ்வு நிலைத்திருக்கும். ஆனால், என்ன துன்பம் வந்தாலும் முஸ்லிம்களிடம் சரணடைவது இல்லை என்று முடிவெடுத்து, நம்பிக்கையோடு மீண்டும் படை திரட்டி, போரிட்டு, தனது ராஜ்யத்தைக் கைப்பற்றினார் மகாராணா பிரதாபசிம்மன். வாழ்நாள் முழுவதும் அக்பருக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார்.

*ஹிந்து தர்மத்தையும் பாரத நாட்டையும் காக்க மகாராணா பிரதாபசிம்மன் செய்த தியாகம் ஒப்பற்றது.*